# சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்

## O.S. No. 111 / 2023

**14.07.2026.**

**PW1:** சுஜாதா

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி லலிதா என்பவர் எனது தாயார் என்று சொன்னால் சரிதான் தாவா சொத்து எனது தாயார் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் எனது தாயாரான 1ம் பிரதிவாதி தற்போதும் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். எனது தாயார் பெயரில் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டதால் அந்த சொத்தை அவர் யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்ய உரிமை உண்டு என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை எனது தாயார் எனக்கு கொடுப்பதாக கூறியதன் பேரில் தற்போது என்னிடம் காட்டப்படும் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. வாசாஆ 2ன் இரண்டாம் பக்கத்தில் தாவா சொத்தை நான் கேட்கும்போது எனது பெயரிலோ அல்லது எனது குழந்தை பெயரிலோ பத்திரம் எழுதி கொடுக்க சம்மதிப்பதாக குறிப்பிடப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாசா 2 ஏற்பட்ட பின்பு 1ம் பிரதிவாதியான எனது தாயார் தாவா சொத்து சம்பந்தமாக எனது பெயரில் பத்திரம் ஏதும் எழுதி கொடுக்கவில்லை. நான் எனது தாயாரிடம் 2017ம் வருடம் வரை தாவா சொத்து சம்பந்தமாக எவ்வித பத்திரமும் எனது பெயரில் எழுதி தர கேட்கவில்லை. எனது தாயார் எனக்கு தேவைபடும் நேரத்தில் தாவா சொத்து சம்பந்தமாக பத்திரம் எழுதி தருவார் என்று இருந்தேன். 2017ம் வருடம் வரை நான் எனது தாயாரிடம் வாசாஆ 2ன் கீழான கிரைய ஒப்பந்தத்தின் படி கிரைய பத்திரம் எழுதி கொடுக்க வாய் மொழியாகவோ எழுத்து மூலமாகவோ வழக்கறிஞர் அறிவிப்பு மூலமாகவோ கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். வாசாஆ 2 கீழான ஆவணத்தில் 2ம் பத்தியில் 2ம் பக்கத்தில் அந்த ஆவணம் ஏற்படுத்தபட்ட நாளில் தாவா சொத்து சம்பந்தமான எனது தாயார் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசலையும் தாவா சொத்தின் சுவாதினத்தையும் என்னிடம் ஒப்படைத்ததாக குறிப்பிடபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தாயர் பேரிலுள்ள வாசாஆ.1ம் கீழான கிரைய பத்திரத்தின் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தாயார் கிரைய பத்திரத்தின் அசலை என்னிடம் கொடுக்கவில்லை, அவரிடம் தான் இருந்தது. தாவா சொத்தின் மீது வாசாஆ 2ம் கீழான ஆவணத்தின் மூலம் நான் முழு உரிமை கோருகிறேன் எனது தாயார் தாவா சொத்தை எனக்கு கொடுப்பதாக கூறிதான அந்த ஆவணத்தை ஏற்படுத்தினார். தாவா சொத்தை 1ம் பிரதிவாதியான எனது தாயார் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தது **சம்பந்தமாக** எனக்கு 2020ம் வருடம் அக்டோபர் மாதம் தான் தெரிந்தது. அக்டோபர் மாதம் ஒரு நாள் 2ம் பிரதிவாதி மற்றும் 4 நபர்கள் தாவா சொத்திற்கு வந்து தாவா சொத்தை அவர்கள் கிரையம் பெற்றதாக கூறி பிரச்சனை செய்வதாக வீட்டிலிருந்த எனது மகன் நான் வெளியே சென்றிருந்தால் எனக்கு தகவல் கொடுத்தார் அந்த சமயத்தில் தான் அதை பற்றி எனக்கு தெரிய வந்தது. சுமார் ஒரு வாரம் கழித்து 2ம் பிாதிவாதி தாவா சொத்திற்கு வந்து பிரச்சனை செய்தது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் நாங்கள் அளித்த புகாரின்பேரில் 2ம் பிரதிவாதியை போலீசார் அழைத்து விசாரணை செய்ததாக எனக்கு தெரிய வந்தது. அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது புகாரின் பேரில் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. நான் சொன்னவாறு 2ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு வந்து பிரச்சனை ஏதும்

செய்யவில்லை என்றும் அதனால் தான் போலீசார் நான் அளித்த புகாரின் பேரில் தான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2017ம் வருடம் தாவா சொத்தில் வீடு இருந்தது அந்த வீட்டை நான் தான் கட்டினேன். தாவா சொத்தை எனது தாயார் 2004ம் வருடம் கிரையம் பெற்றார் 2005ம் வருடம் நான் தாவா சொத்தில் வீடு கட்டினேன். வீடு கட்டுவதற்கான கட்டுமான அனுமதி நாங்கள் பெற்றோமா என்பது எனக்கு நினைவில்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டை எனது தாயார் தான் கட்டினார் என்று சொன்னால் சரியல்ல தாவா சொத்தில் உள்ள வீடு கட்டுமான அனுமதி பெறாமல் கட்டபட்டது என்று சொன்னால் கட்டுமான அனுமதி பெறபட்டது எனக்கு நினைவில்லை தாவா சொத்தில் உள்ள வீட்டை நான் கட்டியதற்கு ஆதாரமாக ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து எனது சுவாதினத்தில் இருப்பதற்கு ஆதாரமாக எனது பெயரில் உள்ள ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் எனது மகன் பேரில் உள்ள ஆதார் அட்டையை தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்றும் இவ்வழக்கிற்காக தாவா சொத்தின் சுவாதினத்தில் உள்ளேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ 5ன் கீழ் நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகளின் படி வீட்டு வரி எனது தாயார் பெயரில் அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாசா.ஆ 6ன் படி 6ல் உள்ள மின்கட்டண அட்டை எனது தாயார் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ 7 கீழ் நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்கு மற்றும் ஜமாபந்தி சிட்டா ஆகியவையும் எனது தாயார் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் மீது எனக்கு உரிமை உள்ளதற்கு ஆதாரமாக நான் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான கிருஷ்ணமூர்த்தி என்பவரை எனது தகப்பனாரின் மூலம் எனக்கு தெரியும். 09.06.2017 அன்று 1ம் பிரதிவாதியான எனது தாயார் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தது சம்பந்தமாக எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான் அது குறித்து 2020ம் வருடம் தான் எனக்கு தெரிய வந்தது. வாசா.ஆ 4 கீழான கிரைய பத்திரத்தில் கிரையம் செய்து கொடுத்த அன்று எனது தாயார் 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் சுவாதினத்தை ஒப்படைத்ததாக குறிப்பிடபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும் அந்த கிரைய பத்திரத்தின் படி கிரைய தொகையாக 31,50,000 செலுத்தபட்டதாக உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தாயார் அவரிடம் இருந்து தாவா சொத்து சம்பந்தமாக முறைகேடாக கிரைய பத்திரம் எழுதி பெறப்பட்டதாக கூறி புகாரோ வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வாசா.ஆ 2ன் கீழான கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் தாவா சொத்தின் மீது உரிமையேதும் கோர முடியாது என்றும் வாசாஆ 4 கீழான கிரைய ஒப்பந்தத்தின்படி 2 பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் முறையாக கிரையம் பெற்றதால் 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் முழு உரிமையாளர் ஆவார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின் தாவா சொத்தின் சுவாதினத்தை ஒப்படைக்க கோரி எனது கணவரிடம் கேட்டபோது எனது கணவர் அவரிடம் 3 மாதம் கழித்து தாவா சொத்தின் சுவாதினத்தை ஒப்படைப்பதாக கூறியதாகவும் பின்பு 3 மாதம் கழித்து தாவா சொத்தை காலி செய்து ஒப்படைக்குமாறு கேட்டபட்சத்தில் நாங்கள் தாவா சொத்தின் சுவாதினத்தை ஒ்பபடைக்காமல் இந்நாள் வரை தாவா சொத்தின் சுவாதினத்தில் இருந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு 2ம் பிரதிவாதி ஒருபோதும் எங்களிடம் கேட்கவில்லை. கடந்த 2025ம் வருடம் 2ம் பிரதிவாதி எனது தாயார் எனது கணவர் மற்றும் எனக்கு எதிராக தாவா சொத்தின் சுவாதினத்தை ஒப்படைக்ககோரி பொன்னேரி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 232/2025 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த வழக்கை அழைப்பாணை பெற்று விசாரணைக்கு ஆஜராகி வருகிறோம் என்றால் சரிதான். கடந்த 10.12.2009ம் அன்று ஏற்படுத்தபட்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2021ம் வருடம் தாவா சொத்து சம்பந்தமாக 1ம் பிரதிவாதி எனக்கு கிரையம் பத்திரம் எழுதி கொடுக்க உத்தரவிட கோரி நான் பரிகாரம் கோர முடியாது என்றும் காலவரை சட்டத்தின் கீழ் அந்த பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி தாவா சொத்தை முறையாக கிரையம்

பெற்றுள்ளார் என்றும் 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை முழு உரிமையாளர் என்றும் எனவே 09.06.2017 அன்று 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லதக்கது அல்ல என விளம்புகை செய்ய நான் கோரியுள்ள பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேலும் 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரங்களும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வீட்டிலுள்ள சிசிடிவி கேமரா பதிவு செய்யபட்டதை சீடியில் பதிவு செய்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் குறிப்பாக யார் உதவி மூலமாக பதிவு செய்யபட்டது என்று எனக்கு தெரியாது. எனது தாயாரான 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தபோதிலும் எனது தாயாரான 1ம் பிரதிவாதியும் நானும் 2ம் பிரதிவாதியை ஏமாற்றும் எண்ணத்தில் அதன் சுவாதினத்தை ஒப்படைக்காமல் இருந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் இவ்வழக்கில் ஆஜராகி இவ்வழக்கை நடத்தவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தாயாரும் நானும் 2ம் பிரதிவாதியை ஏமாற்றும் எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் வேண்டுமென்றே இந்த வழக்கில் எனது தாயார் ஆஜராகாமல் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ 2ன் கீழான கிரைய ஒப்பந்தம் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தபட்ட ஆவணம் என்றும் அது சட்டபடி செல்லதக்கது அல்ல என்றும் அதன் அடிப்படையில் நான் பரிகாரம் ஏதும் கோரமுடியாது என்றும் எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.